

# பரலோக பொக்கிஷங்கள்

**ஆவியானவர் நம்மீது தங்குவார்!** [யோவான் 1:33]



## எமை சிருஷ்டித்து பாதுகாக்கும் 'பரம தந்தையே' போற்றி!

எம் உயிரையும் அவயவங்களையும், நான் பிரமிக்கத் தக்க அதிசயமாய் (Fearfully and wonderfully) படைத்த சிருஷ்டிப்பின் பெருமானே போற்றி! (சங்.139:14-16). பத்துமாதம் சுமந்து பெற்ற எம் தாயார், தந்தையார்! நீரோ, பத்துமாதம் சுமந்தல்ல, தாயின் வயிற்றில் உருவாகும் முன்பே சிருஷ்டித்து சுமந்த எம் பரம தகப்பன்! பெற்றெடுத்த தந்தை மறைந்தாலும், இம்மைக்கும் மறுமைக்கும் 'நித்திய பிதாவாய்' உம்மை எமக்கு அருளித்தந்த "என் தந்தையே! என் அன்பே!" போற்றி, போற்றி!!

2026 புத்தாண்டிலும், உம் பரம பாதமே எம் தஞ்சம்!

-tr



## அவரை ஆராதித்து அன்புகூர்பவனே, நித்திய ஊழியம் பெறுவான்!

மெய்யான ஆராதனையே, தேவனோடு நம்மை உயரச் செய்கிறது! அல்லது, தேவனை இழந்து, தாழச் செய்கிறது! கிறிஸ்தவனுக்கும், கிறிஸ்தவ சபையிலும் நிலவிவரும் கொடிய வியாதி என்னவென்றால், தேவன் அவர்களுக்கு சாமானிய சகஜமாய் இருப்பதுபோல், இருப்பதுதான்! மகா உன்னத தேவனை அவர்கள் கொண்டிருப்பதாக தோன்றவில்லை! ஏனெனில், 'ஆராதிப்பவன்' பரிசுத்தமும் தாழ்மையுமாய் இருந்திருக்க வேண்டும். ஆத்துமத்தின் இந்த இரகசியமே, தேவனுடைய சாயலை அவன் மனதாரக் கண்டு உணரச் செய்திட முடியும்!

மனந்திரும்பி விசுவாசியாய் மாறிய ஒவ்வொருவனும் 'முதலாவது' அவரை ஆராதிக்கவும்! 'இரண்டாவதாகவே' அவருக்கு ஊழியஞ் செய்யவும் தேவன் அழைத்திருக்கிறார்! மெய்யாகவே, ஆராதிப்பவனின் ஊழியத்தில் மாத்திரமே 'நித்தியம்' இடம்பெறும்!

*-Ed*


**2026 'பரலோக பொக்கிஷங்கள்' சந்தா புதுப்பிக்கவும்**

வருட சந்தா **ரூ.170/-** தயவுசெய்து உடன் M.O செய்து அல்லது ஆன்லைன் மூலம் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு **ஜனவரி 10-ம் தேதிக்குள்** அனுப்பி புதுப்பித்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். ஒரே விலாசத்தில் 3 பிரதிக்கு மேல் ஒரு பிரதி வீதம் ரூ.140/- அயல்நாடு ஒரு பிரதி ரூ.950/- அனுப்ப வேண்டும். புதுப்பித்துக் கொள்பவர்கள், தங்கள் சந்தா எண்ணை குறிப்பிடவும், புதிதாய் வாங்குபவர்கள் 'புதிது' என்று குறிப்பிடவும். நன்றி!

வங்கி கணக்கு: MADURAI CHRISTIAN FELLOWSHIP, Indian Bank - Koodal Nagar Branch
A/c No: **502087685** IFSC Code: IDIB000K150
(வங்கியில் செலுத்தியபின், உங்கள் விலாசம் மற்றும் தகவல் தெரிவிக்கவும்)
**G-Pay -** பின்பக்கம் உள்ள **QR** கோடு மூலம் அனுப்பலாம்.



கடித தொடர்பு : பரலோக பொக்கிஷங்கள் 207A- Jaheer Husain Street, Koodal Nagar, (Thathaneri P.O.) Madurai - 625018, S.India Cell : 98430 49935 Ph (O) 0452 - 7966138
Email: rathnakumar.t@gmail.com தமிழ் வலைதளம்: paralogapokkishangal.com
You Tube : (for Spiritual messages) paralogapokkishangal
You Tube : (for Gospel messages) gospelforall



## ‘ஆண்டு முழுவதும்’
## நம்மை மெதுவாக நடத்தும் கர்த்தர்!

*பாதையில் ‘முன் செல்லும்’ மேய்ப்பன் நமது ஆறுதல்*

*ஜீவிய பயணத்தில் நாமும் நம் குடும்பமும் ஒரு எல்லை கடந்து மறு எல்லைக்குள் அடியெடுத்து வைக்கிறோம்! அதுபோலவே, நம்மோடுகூட சேர்ந்து வாழும் கால்நடைகளும் சேர்ந்து நடந்து வருகின்றன. இதைக் குறிப்பிடும் வசனமே ஆதியாகமம் 33:13,14- வசனங்களில் நாம் வாசிக்கிறோம். அங்கு யாக்கோபு எடுத்துரைக்கும் ஓர் தகவல், நம்முடைய வாழ்க்கையை தேவன் எவ்வாறு நடத்துகிறார்! என்ற அறிவிப்பாகவே இருக்கிறது! அந்த ஆச்சரியமான வசனம் என்னவெனில் “எனக்கு முன் நடக்கிற மந்தைகளின் கால்நடைக்கும், சிறு பிள்ளைகளின் கால்நடைக்கும் தக்கதாக, மெதுவாய் அவைகளை நடத்திக்கொண்டு வருகிறேன்” என்று யாக்கோபு அறிவித்தார்.*

> **“நமக்கு முன் வைக்கப்பட்ட இந்த புதிய நாள் தொடங்கி, ஒரு நாள் கூட நம்மை அவர் துரிதமாய் நடத்தாமல் “மெதுவாய் நடத்துவார்” என்ற வசனம் எவ்வளவு பெரிய ஆறுதலை நமக்குத் தருகிறது.**

*இதற்கு நேர்மாறாக, வலிமை கொண்ட ஏசாவோ, கறவை கால்நடைகளையும் யாக்கோபின் பரிவாரத்தையும், தானே துரிதமாய் நடத்தும்படி எத்தனித்து முன் வந்தான்! (ஆதி.34:12).*

*ஆனால் யாக்கோபோ, தேவனுடைய பாரிசத்தில் நின்றபடியால் தன் மந்தையும் தன் மக்களும் எவ்வளவு தூரம் நடக்கமுடியும்? என்பதை அனுபவபூர்வமாய் அறிந்து வைத்திருந்தபடியால், தன் சகோதரன் ஏசா நடத்திச் செல்வதை ஏற்கவில்லை! அது, அவன் மந்தையின் மீதும் தன்னோடு சேர்ந்து நடக்கும் பிள்ளைகளின் மீதும் அவன் வைத்திருந்த அக்கறையை காட்டுகிறது. இவ்வாறு ஜனங்களையும் கால்நடைகளையும் இந்த ஏசா முன்பு ஒருபோதும் நடத்திச் சென்றதில்லை! ஆனால் யாக்கோபோ, பாதையின் கரடு முரடுகளையும், வெயிலின் உஷ்ணத்தையும் தன் தனிப்பட்ட அனுபவமாய் அறிந்திருந்தான்.*

ஆகவேதான் "நான் அவைகளை மெதுவாய் நடத்திக் கொண்டு வருகிறேன்" என அக்கறையுடன் உறுதியாகக் கூற முடிந்தது!

இந்த ஆண்டு முழுவதும் நாம் நடக்கபோகும் பாதையின் கடினத்தையும் வெப்பத்தையும் நாம் முன்கூட்டியே அறிந்ததில்லை. ஆனால் நமக்காகவே, நம் முன் நடந்த ஆண்டவர் இயேசு, எல்லாவற்றையும் அனுபவமாய் அறிவார். நமக்கோ, தெரியாத பாதை! நம் கால் அனுபவித்திராத வேதனைகள்! ஆகிய யாவையும் ஆண்டவர் இயேசு நமக்காக அனுபவித்திருக்கிறார். பயணம் செல்ல வேண்டிய நம் பாதையில், மேலே ஏறும் உச்சி மலைகளும் உண்டு! நம் கால்களுக்கு வலி எடுக்கும் பாறையான பாதைகளும் உண்டு! நிழல் ஏதுமில்லாத சுட்டெரிக்கும் வெப்பம் நிறைந்த மணல் மேடுகளுமுண்டு! கடந்து செல்ல வேண்டிய சீறிப்பாயும் ஆறுகளும் உண்டு! ஆகிய இவை யாவையும், நமக்காக வந்த ஆண்டவர் இயேசு, முன் நடந்து அனுபவித்திருக்கிறார். நீண்ட பயணத்தில் நமக்காக களைப்படைந்த நல்ல மேய்ப்பர் அவர்! வெறும் ஆற்று நீரை அல்ல, ஆற்றுவெள்ளத்தையும் நமக்காக கடந்து சென்று நம்மை அன்புகூர்ந்தவர்!

> **"நமக்கு முன்சென்று, பட்ட பாடுகளினிமித்தம் தலைசிறந்த மேய்ப்பனாய் பூரணமடைந்தவர்! (எபி.2:10). ஆகவேதான் "நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிந்திருக்கிறார். நாம் பலவீனமான மண் என்றும் மனதில் வைத்திருக்கிறார்" (சங்.103:14).**

*அவர் நம்மை மெதுவாக நடத்துவதைக் குறித்து சந்தேகம் ஏற்படுவது நல்லதல்ல! அப்படியெல்லாம் அவரை சந்தேகப்பட்டு கேள்வி கேட்பதற்கு, முற்காலங்களில் அனேகர் சோதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவரோ, நம் ஜீவிய பயணத்தை குறித்தே எப்போதும் நினைவாயிருக்கிறார்! "இனி ஒரு அடிகூட எடுத்து வைக்க இயலாது" என்ற உங்கள் இயலாமையை அறிந்து உணர்ந்திருக்கிறார்! உங்கள் பாதங்கள் அடுத்து முன்வைத்திடும் பாதை இன்னதென்று அறியாமல் திகைக்கலாம். ஆனால் நிச்சயமாய், அந்தக் கடினப்பாதை முன் சென்றிட போதுமான பெலனை உங்களுக்குத் தருவார்! அல்லது பயணத்தை உடனடியாக நிறுத்தி, அமரச்செய்து, உங்களுக்கு சிரமம் ஏற்படுத்தாமல் பாதுகாப்பார்!*

நம் நல்ல மேய்ப்பர் 'பசும்புல்வெளி மேய்ச்சலில்' நடத்திச்செல்வார். அந்த மாறாத அன்பைக் கொண்டு, கடின பாதைக்குள்ளாகவும்

*நடத்திச் செல்வார். அந்தப் பாதையில், இனிமையான தன் அன்பையே காட்டுவார்! இருள் சூழ்ந்த நேரத்திலும், துயர பாதையிலும் பரிவாக நடத்திச் செல்வார். மிக உயர்ந்த மலை குன்றுகளிலும், சூரிய ஒளியே படாத அந்தகார பள்ளத்தாக்குகளிலும் நடத்திச் செல்வார். சுட்டெரிக்கும் வெயிலிலோ, நிழலான இடங்களில் தங்கியிருக்கும்படி நடத்துவார்!*

**மேய்ப்பனை பின்பற்றும் நீண்ட வாழ்வின் பயணங்களில்,** *நம் மனதை தேற்றும் பெரிய ஆறுதல் என்னவென்றால், நடந்து சென்ற பாதை எத்தனை கஷ்டம் என எண்ணிட நம் மனம் செல்லவில்லை .... மாறாக, எங்கெல்லாம் அவர் நடத்தினாரோ, அங்கெல்லாம் நம் நல்ல மேய்ப்பர் ஆண்டவர் இயேசு இருந்தார்! இனி ஓராண்டு என்ன? முழு ஜீவிய பயணத்தையும் அவரிடமே என்னை ஒப்படைக்கிறேன்! ஆமென்.*

*- Mrs.சார்லஸ் கஃவ்மென்*

---

## கிறிஸ்துவை உயர்த்தாத சபை, கிறிஸ்துவின் சபை அல்ல!

*'உலக ஆவி' சபையை ஆளுவது ஓர் வஞ்சகம்*

*"கிறிஸ்து இல்லாத கிறிஸ்தவம்" எவ்வளவு கவர்ச்சியாய் இருந்தாலும் அதை வஞ்சகமென காண்பவர்கள் மாத்திரமே வழி விலகாதிருப்பார்கள்!*

*"உணர்ச்சி தூண்டும் மனநிலையை மையப்படுத்தி" அதைச் சார்ந்த அனுபவங்களை வஞ்சகம் கவ்விக் கொள்ள முடியும். தாங்கள் மூன்றாவது வானத்திற்குச் சென்றதாகவும்! இயேசுவை பார்த்ததாகவும்! 'இன்னாருக்கு இது சம்பவிக்கும்' என நற்செய்தி என்ற பெயரில் 'குறி சொல்வதும்' அல்லது பயமுறுத்தி தீர்க்கதரிசனம் சொல்வதைப்போல் கூறியும், நரகத்தைப் பார்த்ததாகக் கூறியும்.... ஆகிய இதுபோன்ற 'மனநிலை' உணர்ச்சி பரவசத் தூண்டுதலால், திரளான கிறிஸ்தவர்கள் வஞ்சிக்கப்படுகிறார்கள். உங்களுக்கு முன்பாக இவ்வாறாகக் கூறியவர்களை உற்று நோக்கிப் பாருங்கள்..... அவர்களுடைய மனசாட்சியின் ஜீவியத்தில் 'கிறிஸ்துவின் பிரகாசம்' கொஞ்சம் கொஞ்சமாய் மங்குவதை நீங்கள் கண்டுகொள்ள முடியும்!*

> **"இதுபோன்ற பரவச வஞ்சகத்திற்குள் விழாமல் "கிறிஸ்துவோடு நம்மை ஈர்த்துக் கொள்ளும்" சத்தியங்களே, நம்மை வஞ்சகத்திலிருந்து மீட்டுக்கொள்ள முடியும்! (மத்தேயு 3:17, யோவான் 14:6).**

*பரிசுத்த வேதாகமத்தையும், அதன் சத்திய வாக்கியங்களையும், பாதித்திடும் எதையும், வஞ்சகம் என நாம் புறக்கணிக்க வேண்டும்.*

*வேத வாக்கியங்களுக்கு வெளியே அல்லது வேத வாக்கியத்தைக் கோடிட்டு காட்ட முடியாத எந்த அனுபவத்தையும், யாதொரு போதனைகளையும்... சந்தேகத்திற்குரியதாய் சோதித்து, பின்பு அதை புறக்கணித்திட வேண்டும். வேத வாக்கியங்களுக்குப் புறம்பான யாதொரு போதனையும் "விடியற்காலத்து வெளிச்சமில்லை" என புறக்கணித்திட ஏசாயா 8:20 தெளிவாக கூறுகிறது!*

*'புதிய சத்தியம்' அல்லது 'தனித்தன்மை ஆழம் கொண்டது' என அறிவிக்கப்படும் செய்திகள் எதுவாயிருந்தாலும், அவைகளை நாம் மிகுந்த கவனம் கொண்டு காண வேண்டும். இந்த கடைசி 50 ஆண்டுகளில் வேத வாக்கியங்களுக்குப் புறம்பான கருத்துக்கள் ஏராளமாய் புகுத்தப்பட்டு, அதை வைத்து, திரளான கிறிஸ்தவர்களின் அங்கீகாரத்தையும் சில சபை குழுவினர் பெற்றுவிட்டார்கள்! மேலும்* **"கடைசி நாட்களில் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்கள்"** *எனக்கூறும் வஞ்சகங்களும் இக்காலங்களில் பெருகிவிட்டன! இவ்வாறு 'வேதத்தில் கண்ட அப்போஸ்தலர்களைவிட' தாங்கள் ஞானமுள்ளவர்கள் என்றோ அல்லது ஆதி சபை பரிசுத்தவான்களை விட வெளிப்பாடு பெற்றவர்களென்றோ, கூறும் யாதொரு தனி நபர்களைக் குறித்தும், சபை குழுவினரைக் குறித்தும், நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்!*

*மேலும், மெய்யான வல்லமை வேத வசனத்தில் அல்ல.... அது வெளிப்பாடு கொண்ட எங்கள் 'ஆவியில்' உள்ளது எனக் கூறுபவர்கள், வேத வாக்கியத்தின் மதிப்பை குறைத்துவிட முற்படுகிறபடியால், அவர்களைக் குறித்தும் நாம் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்!*

> **"வேத வாக்கிய எழுத்துக்கள் சத்தியத்திற்கு இணையான மதிப்புடையவைகள்! ஒன்று மற்றொன்றை ஏற்றுக்கொள்ளும் புனித நிலை கொண்டவைகள்!**

*தேன் அடையிலிருந்து (கூட்டிலிருந்து) தேனை வெளியே எடுத்துக்கொள்ளலாம். ஆனால், தேன் அடையில்லாமல், தேன் இல்லை! அதுபோலவே, சத்தியத்தின் ஆவி, பரிசுத்த வேத வாக்கிய எழுத்துக்களுக்கு அப்பாற்பட்டு செயல்படுவதில்லை! ஆகவேதான் நாம் பரிசுத்தாவியோடு எப்போதும் கொண்டிருக்க வேண்டிய நிறைவும் - தொடர்பும் இருந்தால் மாத்திரமே, வேத வாக்கியங்களின் மீது நாம் கொண்ட அன்பு பெருகிட முடியும்!*

*மேலும், சபையிலுள்ள சக கிறிஸ்தவ சகோதர சகோதரிகளோடு கொண்ட உறவில் நாம் கொண்டிருக்கும் மனநிலை மாறும்போதும், வஞ்சகம் ஏற்பட சாத்தியமாயிருக்கிறது!*

"

**நல்ல கிறிஸ்தவ நண்பர்களைப்போல் சபையில் இருந்துகொண்டு, திடீரென்று 'சபையில் கற்ற ஆவிக்குரிய வார்த்தைகளை தவறாய் பயன்படுத்தி' சபையையோ அல்லது சபையிலுள்ள ஆவிக்குரிய ஊழியர்களையோ தாக்குபவர்களும் உண்டு!**

*இவர்கள், தங்கள் சக விசுவாசிகளை பிரித்து வைத்து, குறைசொல்லும் ஆவியில் வளருவார்கள்! தங்களை முதிர்ச்சி பெற்றவர்களென்று எண்ணி, சபை செல்லும் திசையைக் கூட மாற்ற முயற்சிப்பார்கள். இவர்கள் ஏதாவது சில சரத்துக்களை கோடிட்டு தங்களை நியாயப்படுத்த முயற்சிக்கிறபடியால், மிகுந்த அபாயம் நிறைந்தவர்கள்! இவர்கள் கோடிட்டு காட்டும் சரத்துக்கள் (Facts), ஆவிக்குரியதைப்போல் தோன்றினாலும், அது அனைத்தும் அன்பற்ற தன்மை கொண்டவைகள்! தங்கள் சக கிறிஸ்தவர்களோடு இணைந்து அன்பு பாராட்ட தவறும் யாதொரு மேன்மையும் புறக்கணிக்கப்பட வேண்டியவைகள்! (1யோவான்.3:18,19).*

உலகத்தோடு கொண்ட மனப்பான்மையில், வஞ்சகங்கள் நமக் குள்ளும் சபைக்குள்ளும் பிரவேசித்திட முடியும். ஒரு நல்ல சபையில் இருந்துகொண்டு தேவனற்ற இன்பங்களுக்கு கைக்கொடுப்பதும், பூமிக்குரிய ஐசுவரியத்திற்கும், கனத்திற்கும் பின்னால் போவதும்....

"

**கிறிஸ்தவ மறுரூபத்திற்கு இடம் கொடாமல், பொதுவான கிறிஸ்தவ சமுதாய ஸ்தாபனத்திற்கு தன் மனதை பறி கொடுத்து, நரகம் நோக்கி பயணம் செய்ய விரும்புகிறவர்களும், ஆகிய இவர்கள், கிறிஸ்து வாசம் செய்யும் மெய்யான சபைக்கு விரோதிகள்! (1யோ.2:15-17; 2கொரி.6:14).**

வேத சத்தியத்திற்கு புறம்பாய், உலகத்தோடு சமரசம் செய்து கொள்ள அனுமதிப்பது ஓர் கள்ள ஆவி என்றே கூற வேண்டும்! அதை அனுமதிக்கும் சபையை, கள்ள சபை என்றே கூற வேண்டும்!

இவர்கள் 'கிறிஸ்துவின் சிலுவைக்கு' பகைஞர்களாய் மாறி சாத்தானுக்கு கை கொடுப்பவர்கள். இவ்வித கொடூர வஞ்சகங்கள் மத்தியில், எங்கெல்லாம் பரிசுத்தம் 'அழகுடையதாய்' போற்றப் படுகிறதோ! எங்கெல்லாம், பாவம் 'பொறுத்து கொள்ள முடியாததாய்' எதிர்க்கப்படுகிறதோ! அதுபோன்ற ஆவியே, நாம் மனதார ஏற்றுக்கொள்ள வேண்டிய புனிதமான ஆவியாகும்! அவ்வாறு இல்லாமல், நாம் மேலே கண்ட வேறுபாடான ஆவிகளை வஞ்சக ஆவி என்று, நாம் தெளிந்த புத்தியுடன் விளங்கிக்கொள்வது, எந்த ஒரு உண்மையான சபையிலுள்ள மக்களுக்கும் சாலச் சிறந்ததாகும்!

*- A.W.டோசர்*

## மாசு நீங்க, நீங்க.... திவ்ய அன்பு நிறைந்து வழிந்திடும்!

*திவ்ய அன்பில் பெருகி, வளர்ச்சி அடையுங்கள்*

நான் கண்டடைந்த சுத்திகரிப்பும் அதோடு சேர்ந்து தெய்வ அன்பில் நான் வளர்ந்ததையும் கண்டு, என் கர்த்தரை ஸ்தோத்தரித்தேன்: யாரோ ஒருவரைக் குறித்த எனக்குள் இருந்த **கசப்பை** நான் கண்டு, சுத்திகரித்துக் கொண்டேன். அந்த சுத்திகரிப்பு ஓய்ந்த பிறகு 'வேறொரு விதமான கசப்பு' எனக்குள் இருந்ததைக் கண்டேன்! அதை முற்றிலும் என்னை விட்டு கழுவிக் கொண்ட பிறகு, திவ்ய அன்பு என் இருதயத்தை மகிழச்செய்து என்னை ஆட்கொண்டது!

மறைவான என் **தீய நோக்கங்களை,** என் நேச கர்த்தர் தாமதமின்றி சுட்டிக் காட்டினார். நான் பேசிய சில சமயங்களில், மறைந்திருந்த **சொற்களின் அசுசிகளை** என் நேச கர்த்தர் சுட்டிக்காட்டினார்........ நான் விரைவாய் என் நாவை அடக்கி அமைதி கொண்டேன். இன்னும் சில சமயங்களில், என்னுடைய **மௌனத்திலும் 'அசுசி இருப்பதை'** சுட்டிக் காட்டினார்! நான், தான தருமம் செய்வதிலும் 'உபகாரி' பெருமை இருந்ததையும், ஓய்ந்திருந்த நேரத்திலும் கூட என்னுடைய **சோம்பலின் அசுசியை** நான் கழுவிக்கொள்ள செய்தார். என்னுடைய நடையில் **'இளவரசி' அகந்தையைக்** கண்டேன்....... என்னுடைய பேச்சில் எனக்கு சார்பாக பேசும் **நியாயப்படுத்தும் பெருமையைக்** கண்டேன்! எனக்குள்ளாக நான் பேசிக்கொண்டதில் **மறைந்திருந்த சுயத்தைக்** கண்டேன். நான் உற்றார் உறவினரோடு 'அதிக சந்தோஷமடைந்ததிலும்' **மாயையான கறையிருந்ததைக்** கண்டேன்.... இவ்வாறு,

> **"என் நேசர் என்மீது கொண்ட தூய அன்பு, என் மீது கொண்டிருந்த வைராக்கியத்தில் 'ஒரு சிறு பிழையும்' எனக்குள் ஒளிந்து கொள்ளாதபடி கண்டித்து கழுவினார். அவர் என்னை தமது அன்பிற்காக கருத்தாய் கண்காணித்த விதம், என்னை ஆச்சரியப்படுத்தியது!**

என் உள்ளமோ, "ஓ என் நேசரே, நீர் மகா உண்மையுள்ளவர்! மகா அன்புள்ளவர்! உமது பிள்ளைகளை அளவில்லாது நேசிப்பவர்! இவைகளை, வெளியில் உள்ள ஆசீர்வாதங்களை வைத்துக் கூற வில்லை. அப்படிச்செய்தால் 'உமது மாசில்லா அன்பை' குறுகிய வட்டத்திற்குள் அடைத்துப் போட்டதாய் மாறிவிடும். நீரோ, என் ஆத்தும நேசர்! என் ஆத்துமாவை விசாரிப்பதால், நான் திருத்தப்பட்டு, பரிசுத்தமாகுதலில் அளவிற்கடங்காத புத்துணர்ச்சியை எனக்குள் பெற்று மகிழுகிறேன்" எனக்கூறி, என் உள்ளம் களிகூர்ந்தது!

*ஒரு ஆத்துமா, "நான் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவன்! அவரால் கண்டித்து திருத்தப்படுகிறேன்!" என்ற நிச்சயத்தை உடையதாயிருக்க வேண்டும். அது, தேவனிடத்திலிருந்து இறங்கி வரும் இரகசிய அக்கினி.... அது சுட்டெரிக்கும்! சுயத்தின் - கரடான மூட்டுகளை சொஸ்தப்படுத்தும்!*

"

**இவ்வாறு, தேவன் எதைச் செய்தாலும், ஒரு ஆத்துமா அதற்கு இணங்கி 'தேவனே உமக்குப் பிரியமானது எதுவோ, அவை அனைத்தும் எனக்குள் செய்திடும்' எனக் கூறியே தேவனை மகிழச் செய்திட வேண்டும்.**

*நானோ "என் ஆத்துமாவே, நீ சில சமயங்களில் யாரோ சில மானிடரிடத்தில் பறந்து சென்று, அவர்களின் ஆறுதலைத் தேடுவது ஏன்? இவ்வாறு நீ செய்தது, தேவன் உனக்கென்று வடித்த அழகு சித்திரத்தை (God's Design) நீ சீர்குலைக்கிறாய் என்பதை அறிவாயாக!" என, என் ஆத்துமாவை, நானே எச்சரித்து, பின்பு ஜெபித்து, தெய்வ அன்பில் பொங்கி வழிந்து, ஆனந்தம் பெற்றேன்!*

*- மேடம் குயான்*

---

## இழப்பிற்கு பின்பே 'தெய்வ உறவை' யோபு ருசித்தார்!

*'விசுவாச முதிர்ச்சி' கற்பிக்கும் அன்புள்ள கர்த்தர்*

*துயரத்தின் நாட்களை எதிர்கொண்டு சென்ற யோபு, ஏக்கத்தோடு கூறிய வார்த்தைகள் யோபு 29:2-6 வசனங்களில் காண்கிறோம்: "சென்று போன மாதங்களிலும், தேவன் என்னை காப்பாற்றி வந்த நாட்களிலும் 'கர்த்தர் என்மேல் வைத்திருந்த அக்கறை'* **இப்போது இருந்திருந்தால்** *நலமாயிருக்குமே!" என தேவனிடம் கேட்டார். இங்குதான், யோபுவுடைய உத்தமத்தை நாம் காண்கிறோம். தன்னுடைய எல்லா ஆஸ்திகளையும், தன்னுடைய எல்லா பிள்ளைகளையும் இழந்ததை அவர் 'முதலாவதாக' குறிப்பிடவில்லையே?!*

"

**அவர் மனதில் பிரதானமாய் தங்கியிருந்த வேதனை என்னவென்றால், தான் தேவனோடு கொண்டிருந்த ஐக்கியத்தை மறைத்துவிட்ட 'கார்மேகத்தைக் குறித்தே' மனம் கலங்கினார்!**

*இந்த சமயத்தில்தான், அவருடைய நினைவு, தேவனோடு கொண்ட முன்னிருந்த காலத்தை ஞாபகத்திற்கு கொண்டு வந்தது: "அந்த நாட்களில், கர்த்தர் தன்னை காப்பாற்றி மிகுந்த கருத்தோடு தன்னை நடத்தி வந்த ஜீவியத்தை" நினைவுகூர்ந்தார். அவருடைய*

*ஜீவிய பாதை முழுவதிலும் '**ஓர் ஒளி விளக்கு**' தனக்கு மேலாக சுழன்று கொண்டிருந்ததைப்போல் கண்டார்! தேவனுடைய அந்த வெளிச்சத்தில், இருள் எவ்வளவு ஆழமாய் இருந்தாலும் அதை அவர் ஒரு பொருட்டென்று எண்ணாமல், இருளின் ஊடாக கடந்துபோனார்! (யோபு **29:3**).*

*இப்போது யோபு ஏங்கியதெல்லாம் "ஒ அந்த, கடந்துபோன நாட்கள் மீண்டும் எனக்கு கிடைத்தால் நலமாயிருக்குமே" என்ற ஏக்கம்தான்! (வச.2). கர்த்தரோடு கொண்டிருந்த ஒளிமயமான அந்த மகிழ்ச்சி நாட்களை அவரால் எளிதில் விசுவாசிக்க முடிந்தது. ஆனால் இப்போது தன் தலைக்குமேல் பிரகாசித்து நடத்திய 'தீப விளக்கு' இல்லை! தன்னை சூழ்ந்து கொண்ட இருளில், கர்த்தரின் வெளிச்சம் தன்னை தொடர்ந்து நடத்துகிறதோ இல்லையோ? என்ற மனகிலேசம் அவரை ஆட்கொண்டு விட்டது.*

> *இவ்வாறு, அன்று யோபு அடைந்த அதே மனகிலேசம் நம் எல்லோருக்கும் ஏற்படுவதை அனுபவித்திருக்கிறோம் அல்லவா? கடந்த வருடங்களில் அவர் தந்த வெளிச்சத்தில் 'உத்தமமான கர்த்தர் மீது' நம் விசுவாசத்தை பதித்து நடந்திட, நமக்கு யாதொரு சிரமமும் அன்று ஏற்படவில்லை! ஆனால்.....*

> **"அந்த எல்லா வருடங்களிலும், கர்த்தர் தனக்குத் தந்த வெளிச்சத்தை நம்பியே யோபு நடந்து வாழ்ந்திருக்கிறார். ஆனால் 'தேவனையே முழுவதுமாய் நம்பி வாழ்ந்திட' இந்த யோபு கற்றுக்கொள்ளவில்லை. தீபம் காட்டிய வெளிச்சத்தின் பிரகாசத்தை 'கண்ணார கண்டு' நடந்தாரே அல்லாமல் 'விசுவாசத்தை மாத்திரமே' பற்றிக்கொண்டு அவர் நடக்கவில்லை. ஆம், அன்று யோபு கற்றுக்கொள்ள வேண்டியிருந்த பாடமே, இன்று நமக்கும் இருக்கிறது!**

*தனக்கும் தன் குடும்பத்திற்கும் இப்போது ஏற்பட்ட இழப்பை, யோபு நன்கு அறிவார்! ஆனால், தான் இழந்தவை அனைத்தையும் 'திரும்பப் பெறுவார்' என்பதை யோபு அறிந்திருக்கவில்லை! அதற்கு மாறாக, கர்த்தர் தன்னை காப்பாற்றி அக்கறை காட்டிய நாட்களை, அவரே நினைவுகூர்ந்து அறிக்கை செய்தார்: "தேவனின் கண்காணிப்பை அவர் பெற்றிருந்ததையும்! கர்த்தரின் ஒளி தீபம் யோபுவின் தலைக்குமேல் பிரகாசித்ததையும்! இருளின் பாதைகளைக் கடந்து போகிட 'தேவ ஒளி' நடத்தியதையும்!" அறிந்து அறிக்கையிட்டார் (யோபு **29:1-3**). இப்போதோ, இந்த சிலாக்கியம் அனைத்தையும் இழக்க வேண்டிய நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டார்!.... ஏனெனில்,*

*1) இப்போது, யோபு மிக ஆழமாய் "தேவனையே" நெருக்கமாய் அறிந்திட வேண்டும் 2) இனிமுதல் கண்டு விசுவாசித்திட அல்ல, தேவனைப் பற்றிக்கொள்ளும் 'காணாமல் விசுவாசிக்கும்' ஒன்றையே சார்ந்து கொண்டு, அவரது திவ்விய அன்பை நம்பியே, வாழ்ந்திட வேண்டும்!* **ஆகிய இந்த உன்னதப் பாடங்களை தன் வாழ்க்கையில் அனுபவித்து வாழவே தேவனால் நடத்தப்பட்டார்!**

*ஆனால் யோபுவா, தன் கடந்த காலத்தில் தேவனுக்குள் மறைந்திருந்த பூரண முதிர்ச்சியை, தான் பெற்றிருந்ததாகவே எண்ணியிருந்தார். ஆனால், அது தவறு! இனிவரும் நாட்களில்தான் பூரண முதிர்ச்சியை நோக்கி, தான் கடந்து செல்வதை அறியப்போகிறார்! மிகுந்த பலன் தரும் வாழ்க்கை 'இனிமேல்தான்' அவருக்கு சம்பவிக்கப்போகிறது!*

*இளமை காலத்தில் 'இயற்கையாகவே' தேவன் நமக்குத் தரும் கிருபை சிறந்த வடிவுள்ளதாகவே காணப்படும். இவ்வாறாக, நம் ஆவிக்குரிய ஜீவியத்தில் வெளிப்படையாய் தோன்றும் உற்சாகமும், தெய்வ அன்பின் இனிமையும் அழகுள்ளதாகவே காட்சியளிக்கிறது. ஆகிலும் அந்த உற்சாகமும் தெய்வ அன்பும் முதிர்ச்சி பெற்றதல்ல! அதில், நமக்குரிய 'சுயமான' கறைகள் உண்டு! தேவனை குறித்ததான நமது தரிசனம், ஒருபட்சமாய் காணப்படும் குறைவுள்ளதாகவும் இருக்கிறது! ஆகிலும், இளமையில் நாம் கொண்டிருந்த தியானமும், ஜீவனும், நமக்கு உற்சாகமான மகிழ்ச்சி தந்ததை அனுபவித்திருக்கிறோம்! ஆனால் 'அதுவே' நிறைவானது அல்ல.... அழகான அந்த மலரின் இதழ்கள் வதங்கி கீழே விழத் தொடங்கிய பிறகுதான், அந்த மலரில் 'பழுத்து வரும்' முதிர்ச்சியின் பலன் தோன்றத் தொடங்குகிறது!*

*கர்த்தர் நடத்தும் இந்த துன்ப பாதையில் நடந்தபின்புதான், கடந்த காலத்தை யோபு திரும்பிப் பார்த்து, மகிழ்ச்சியான தன் நன்றியை கர்த்தருக்கு தெரிவித்தான்!*

> "
> **முன்பு தன் பாதையில் பிரகாசித்த வெளிச்சத்தைவிட, இப்போது அவன் தேவனோடு நடந்துவரும் 'விசுவாச முதிர்ச்சியின் அழகை' இன்னும் அதிகமாய் காணப்போகிறான்!**

*சாந்த உள்ளத்தோடு, தேவனையே நம்பி வாழும் அந்த உறவில் "கர்த்தருடைய ஞானத்தையும் அவரது தயவுள்ள சித்தத்தின் கிரியைகளையும்" காணப்போகிறான்!*

*ஆனால் யோபு, இப்போது துன்பங்களை சந்தித்த சோதனை காலத்தில் "தேவனுடைய இன்பமான நட்பு, அக்காலத்தில்*

*இருந்ததல்லவோ"* (வச.4) என்று எண்ணிப்பார்த்து வருத்தத்துடன் ஏங்கினார். ஆனால், அவருடைய கண்களுக்கு புலப்படாத மேன்மை என்னவென்றால்: 1)யெகோவாகிய தேவன் அன்று காண்பித்த சினேகத்தைவிட, இப்போது அதிகம் யோபுவை சிநேகமாயிருக்கிறார்! 2) இந்த இக்கட்டான நேரத்தில்தான், கர்த்தரை உத்தமமாய் சேவித்த தன்னை அதிக கவனத்தோடு உற்று நோக்குகிறார்! 3) அவருக்கு சொந்தமாய் மீட்கப்பட்ட 'விலையேறப்பெற்ற பொன்' பொற்கொல்லனின் அக்கினியில் சுடப்பட்டு சுத்தமாவதை 'கண்ணிமை தட்டாமல்' அந்த பொற்கொல்லனைப்போலவே மிகுந்த கவனத்துடன் பார்த்துக்கொண்டிருக்கிறார்!

ஆகிய இந்த உண்மைகளை யோபு அன்று அறியவில்லை! ஆம், 'பிற்காலங்களில்' இவ்வித கர்த்தருடைய செயல்களைக் கண்ட பிறகுதான், அனுபவபூர்வமாய், சொல்லி முடியாத மகிழ்ச்சியோடு, தீவிரமாய் கடந்து சென்றார்!

*- ஜெஸி பென் – லூயிஸ் (18ம் நூற்றாண்டு)*

---

## 'அற்புதம் செய்யும்' மாறாத இயேசுவை, மறுதலித்திடக் கூடாது!

*இயேசு 'இன்றும்' அற்புதம் செய்கிறார்*

**யோ**சேப்பு மரித்த காலமுதல், தன் குடும்பத்துக்கடுத்த சகல கஷ்டங்களிலும் இயேசுவாகிய தன் 'மகனையே' *மரியாள்* சார்ந்திருந்தார்கள். அவர் தமது தாயாருக்கு யாதொரு குறைவுமில்லாமல் பராமரித்து வந்ததை *மரியாள்* ஒருபோதும் மறக்கமாட்டார்கள். இப்படியிருக்க, *கானாவூர்* கலியாணத்துக்கு வந்திருந்த விருந்தினருக்கு திராட்சரசம் இல்லாமற் போய்விட்டது! தத்தளிப்பும் அவமானமுமான இந்தச் சமயத்தில், அனுதாபமும் அன்புமுள்ள தன் மகனிடத்தில் அல்லாமல், வேறு யாரிடத்தில் தன் கவலையை *மரியாள்* சொல்லுவார்கள்? அவர் எவ்விதத்திலும் ஒரு வழியைக் காண்பிப்பார் என்ற நம்பிக்கையுடன் மகனைப் பார்த்து: "அவர்களுக்குத் திராட்சரசம் இல்லை" என்றார்கள். "ஸ்திரீயே, உனக்கும் எனக்கும் என்ன? என் வேளை இன்னும் வரவில்லை" என்றார்.

ஏனெனில், இதுமுதல் மரியாளுடைய மகனாகிய இயேசுவாக அல்ல, **தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவாக** ஊழியம் செய்யப் போகிறார்! தன் தாயாரானாலும் சரி, வேறு யாரானாலும் சரி, மேசியாவுடைய காரியத்தில் தலையிடுவதும், அவருக்கு ஆலோசனை சொல்லுவதும், ஒன்றைச் செய்யும்படி அவரைத் துரிதப்படுத்துவதும்

ஒருவராலும் முடியாது!

*அவர் செய்யப்போகிற சகல ஊழிய கிரியைகளும், பிதாவின் சித்தப்படியே செய்யப்பட வேண்டும். கலியாண வீட்டின் குறைவை நீக்குவது தேவசித்தந்தான் என்று அவர் அறிந்தவுடனே, அவருடைய வேளை வந்தது! ஆண்டவருடைய கட்டளைப்பிரகாரம் 6-ஜாடிகள் நிறைய தண்ணீரை வேலைக்காரர் நிரப்பினார்கள். தண்ணீர் திராட்சரசமாய் மாறினது! இது வெறி கொள்ளத்தக்க மதுபானமல்ல, சரீரத்திற்குச் சுகத்தையும் இருதயத்துக்கு மகிழ்ச்சியையும் உண்டாக்கக்கூடிய திராட்சப் பழத்தின் நல்ல ரசம்! அவருடைய மகிமை இவ்வற்புதத்தினால் வெளிப்பட்டது. அவரிடத்தில் வந்து,* ***அவரை விசுவாசித்த*** *அவரது புதிய சீஷர்கள், இன்னும் அதிகமாய் அவரை விசுவாசிப்பதற்கு ஏதுவாயிற்று.*

**“ ஆகிலும், இயற்கைக்கு விரோதமாய் நடக்கும் காரியங்களை 'நடைமுறையில்' நம்புவதற்கு ஏதுவில்லையென்று சொல்லுகிற கிறிஸ்தவர்களும் இக்காலத்தில் நம் மத்தியில் இருக்கிறார்கள்!**

தென்னை மரமானது, தானுண்ட தண்ணீரை மதுரமான இளநீராகக் கொடுக்கும்படி செய்கிறவர் அவரே! திராட்சைச் செடியானது, தன் வேர்களால் உண்ட சாதாரணமான தண்ணீரைத் தன் கனிகளில் ருசியுள்ள ரசமாகக் கொடுக்கும்படி செய்கிறவர் அவரே! அற்புத மூர்த்தியாகிய ஆண்டவர் செய்வதெல்லாம், அவருக்குச் சாதாரணமாயினும் நமக்கு அற்புதமாய் இருக்கிறதல்லவோ?

ஆனால், அவர் தண்ணீரை ரசமாக மாற்றினால், அது நடைமுறையில் எப்படிக்கூடும்? என்று சந்தேகிக்கிற விசுவாசிகளை நாம் என்னவென்று சொல்வது? நம்மைச் சூழ, இடைவிடாமல் ஆண்டவர் நடத்தும் அற்புதங்களை நாம் கவனிக்கிறோமா? **முள்செடிகளில் அழகிய புஷ்பம் எப்படி வருகிறது?** ஒரு விதைபோட, அது முளைத்து மிகுதியான பலனை எப்படித் தருகிறது? மரங்களில் மகா ருசியுள்ள கனிகள் எப்படி உண்டாகின்றன? மனுஷனோ, சாப்பிடவும் சகலத்தையும் அனுபவிக்கவும் தெரியுமேயல்லாமல், அதற்குமேல் அவன் யோசிக்கிறதில்லை! இவ்வண்ணம், விதவிதமாய் ஏராளமான நன்மைகளை மனுஷனுக்கு உண்டுபண்ணிக்கொடுக்கிற சிருஷ்டிகர்த்தா, அவசியமான சமயத்தில் தண்ணீரை திராட்சரசமாக மாற்றினால், அது கூடியகாரியமல்ல என்று பேசுவது நியாயமா?

**“ மகனே திடங்கொள், பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு; மகளே**

**சமாதானத்தோடு போ என்று மற்றவர்களுக்கு அவர் சொன்ன வார்த்தைகள் 'விசுவாசித்தவர்களினிமித்தம்' மனம் பூரித்த அவரது சந்தோஷத்தையே காட்டுகின்றன!**

*ஒரு பாடகன் பாடுவது, சங்கீதம் தனக்குள் இருப்பதனாலேயே யன்றித் தன்னைப் பாடகனென்று காட்டும்படிக்கல்ல. ஒரு தயாளன் நன்மை செய்வது, அவனுக்குள் தர்ம குணமிருப்பதனாலேயன்றித் தன்னைத் தயாளனென்று பிரஸ்தாபிக்கும்படிக்கல்ல! நமது இரட்சகர் செய்த அற்புதங்களும், அதுபோலவே தம்மை தேவகுமாரனென்று வெளிப்படுத்த வேண்டுமென்கிற ஆசையினால் அல்ல! அவர் தேவகுமாரனாயிருந்தபடியினாலேயே மனுஷருடைய ஆபத்து அவசரங்களில், அவர்களுக்கு இரக்கம் செய்வது அவருக்கு இயல்பாயிருந்தது!*

*கானாவூர் ஒரு சிறிய ஊர். கலியாணம் நடந்த குடும்பமோ ஏழை! அப்படியிருந்தும், உலகம் முழுவதிலும் அந்த ஊர் நினைவு கூறப்பட்டுவருகிறது. உலகத்தில் எத்தனையோ ஆலயங்கள் உண்டு. அந்த ஆலயங்களில் கிறிஸ்துவுக்குப்பின் இதுவரை எத்தனையோ கலியாணங்கள் நடந்ததுண்டு. ஒரு கலியாணத்திலாவது கானாவூர் மறக்கப்பட்டதில்லை! கானாவூர் கலியாணத்தில் சமுகமாயிருந்து மாப்பிள்ளை பெண் இருவரையும் ஆசீர்வதித்த ஆண்டவர், இவ்விருபேரையும் ஆசீர்வதிக்கும்படி இங்கெழுந்தருளுமென்று ஜெபிக்காத கலியாணம் கிடையாது!*

*தேவன், ஆதாம் ஏவாளுக்கு கலியாணம் கொடுத்த போது மிகாவேலும் காபிரியேலும் மாப்பிள்ளைத் தோழனாயிருந்தார்களென்றும், மற்றத் தூதர்கள் பெண்ணுக்குரிய பாட்டைப்பாடினார்களென்றும் பூர்வ இரபிமார் 'பாரம்பரியமாய்' சொல்லிக் கொள்ளுகிறதுண்டு. தேவன் தாமே நடத்தின அந்த முதல் கலியாணம் எவ்வளவோ மகிமையாய் நடந்திருக்க வேவண்டுமென்பதை நாம் சந்தேகிக்கவேண்டியதில்லை!*

*அது எப்படியிருந்தபோதிலும், புது சிருஷ்டிப்பை உண்டாக்கும்படி மாம்சத்தில் வெளிப்பட்ட தேவன், கானாவூர் கலியாண வீட்டுக்குப்போய்* **அவர்களை ஆசீர்வதித்த செயல், நம் எல்லோர் வாழ்விலும் விசுவாசத்துடன் நிறைவேற** *கர்த்தர் அருள்புரிவாராக! ஏனெனில் கர்த்தர் வருவார், அவர் என் எல்லா பிரச்சனைகளையும் அற்புதமாய் தீர்ப்பார் என விசுவாசிப்போர், இன்று அனேகரில்லை! 'நடைமுறை இயல்பு வாழ்க்கையை' நம்பி, பின்தங்கிவிட்ட இன்றைய*

கிறிஸ்தவத்தில் ''விசுவாசத்தை'' தங்கள் 'ஜீவிய' சுவாசமாய் கொண்டு வாழும் விசுவாச சந்ததியார், இந்நாட்களில் வீறுகொண்டு எழுந்து வாழ்வார்களாக! கர்த்தருடைய ஊழிய பணியிலும் ஓங்குவார்களாக! ஆமென்.

- பரமானந்தம் ஐயர்

---

## விசுவாச சுகத்தைவிட "விசுவாச தைரியமே" இன்று தேவை!

*'பயம் இல்லாத' விசுவாசிகள் தேவனுக்குப் பிரியம்*

**சு**விட்சர்லாந்து சுகமளிக்கும் பொதுகூட்டத்தில், ஜெபிப்பதற்கு ஜனங்களை அழைத்தார் உத்தம தேவ ஊழியர் *விக்கிள்ஸ்வொர்த்.* அச்சமயத்தில், ஒரு இளம்பெண் தன் முகம் முழுவதும் 'கட்டிகள் பெரிதாகி தொங்க' மேடைக்கு ஏறி வந்தாள். அவளை மேடையின் நடுவே நிறுத்தி, ''புற்றுநோய் வியாதியால் அகோர முகமாகிப் பாதிக்கப்பட்ட இந்தப் பெண்ணை எல்லோரும் பாருங்கள்! இப்போது நான் ஜெபித்தவுடன் புற்றுநோயின் வேர் செத்துவிடும். **நாளை இவள் இதே மேடையில் வந்து நிற்பாள்!** அப்போது இவள் பூரண சுகம் அடைந்ததை நீங்கள் எல்லோரும் காண்பீர்கள்'' என கூறிவிட்டு, அவள் மீது கைவைத்து சுகத்திற்காக ஜெபித்தார்! தலையில் எண்ணெய் பூசி 'இந்த கொடிய வியாதி' அவளை விட்டு நீங்கும்படியாய் கட்டளை கொடுத்தார்.

> **"'புற்றுநோய் வியாதி' சாத்தானின் அழிவுக்குரிய கிரியை என *விக்கிள்ஸ்வொர்த்* அடிக்கடி கூறுவார். ஜெபித்து முடித்தவுடன், மாற்றம் எதுவும் நிகழவில்லை! *விக்கிள்ஸ்வொர்த்* அவளைப் பார்த்து ''நாளை மாலை இந்த மேடையில் நீ வந்து, சுகம் பெற்றதை அறிவித்து தேவனை மகிமைப்படுத்து'' என கூறி, அனுப்பிவிட்டாரே!**

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு அருவருப்பான முகத்தோற்றம் கொண்ட அந்தப் பெண்ணை நன்கு அறிந்த ஊரார், 'நாளை என்ன நடக்குமோ?' என ஆச்சரியப்பட்டார்கள்! நாளையும், அன்று மாலையும் வந்தது! ஜெபவேளையும் வந்தது! எத்தனையோ சுகம் அடைந்த சாட்சிகள் கூறப்பட்டன. புற்றுநோய் வியாதியால் பாதிக்கப்பட்டு, *விக்கிள்ஸ்வொர்த்* ஜெபம் ஏறெடுத்த அந்தப் பெண்ணும் கெம்பீரமாய் நடந்து மேடையின் நடுவில் நின்றாள்! அகோர முகம் கொண்ட அந்தப் பெண், பிரகாச முகத்தோடு அழகுற நின்றதைக் கண்டு, பெரும் திரளான கூட்டம் கர்த்தரை மகிமைப்படுத்தி, ஆரவாரித்தது!

"புற்றுநோய் இருந்த சிறிய வடுகூட அந்தப் பெண்ணின் முகத்தில் காணப்படவில்லை! அந்த மேடையில் விசுவாசம் மாத்திரமல்ல, விக்கிள்ஸ்வொர்த்தின் "விசுவாச தைரியம்" வெளிப்பட்டதை ஜனங்கள் கண்டார்கள்!

*மற்றொரு சம்பவம், சுவிட்சர்லாந்தின் அந்த சுகமளிக்கும் கூட்டத்திலேயே நடந்தது! கிறிஸ்தவர்களிலும் நாத்திகர்கள் பலர் இருக்கிறார்கள்! சுவிட்சர்லாந்தின் பிரபல்யமான பல் மருத்துவராய் டாக்டர் எமில் இருந்தார். அவர் ஒரு கிறிஸ்தவ நாத்திகவாதி! அன்று சாட்சி நேரத்தில் இந்த பிரபல்ய* **பல் டாக்டர் எமில்** *மேடையில் வந்து நின்றார். டாக்டர் எமில் கணக்குப்படி, வயதான ஊழியர் விக்கிள்ஸ்வொர்த்தின் பற்களும் ஈறுகளும் அரித்து நோய்பட்டிருக்கும் என எண்ணினார். "சுகமளிக்கும் இவரின் பற்களையும் ஈறுகளையும் நான் சோதிக்க இடம் தருவீர்களா?" என கேட்டவுடன், ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த் மகிழ்ச்சியுடன் முன் வந்து நின்றார். கூட்டத்தில் சற்று சலசலப்பு ஏற்பட்டது! சில நிமிடங்கள் விக்கிள்ஸ்வொர்த்தின் பற்களையும் ஈறுகளையும் சோதித்துப் பார்த்த டாக்டர் எமில், வெட்கத்தோடு முகம் கவிழ்ந்து "தேவ ஊழியர் விக்கிள்ஸ்வொர்த்தின் பற்களும் ஈறுகளும் பூரண ஆரோக்கியத்துடன் திடமாய் இருக்கிறது" என அறிவித்தவுடன், மக்கள் கர்த்தரை கரகோஷம் செய்து மகிமைப்படுத்தினர்! அன்றுமுதல், டாக்டர் எமில் விக்கிள்ஸ்வொர்த்தின் பெந்தெகொஸ்தே சபையில், முழு அர்ப்பணம் கொண்ட கிறிஸ்தவராய் மாறிவிட்டார்!*

வெறும் 15 பேர் மாத்திரமே இருந்த சபையில், டாக்டர் எமில் மனந்திரும்பி வந்தவுடன், சில நூறு ஜனங்களை கர்த்தர் சபையில் சேர்த்துக் கொண்டார். அவர்கள் அனைவரும் இரட்சிக்கப்பட்டது மாத்திரமல்லாமல், பரிசுத்தாவியினால் நிறைந்திருக்கும்படி விக்கிள்ஸ்வொர்த் நடத்தினார்.

விக்கிள்ஸ்வொர்த்தின் விசுவாச தைரியத்திற்கு மற்றொரு சம்பவம் நிகழ்ந்தது. ஒரு சுகமளிக்கும் கூட்டத்தில், பிரபல்யமான சில மருத்துவர்கள், "இயற்கை விதிக்கு அப்பால் சுகம் பெறுவது சாத்தியமில்லை" எனக்கூறி விக்கிள்ஸ்வொர்த்தின் மீது புகார் செய்தார்கள். அவரை கைது செய்து விசாரணைக்கு அழைத்துவர சில இன்ஸ்பெக்டர்கள் அனுப்பப்பட்டார்கள். சற்றும் எதிர்பாராத விதத்தில், போலீஸ் அதிகாரிகளின் மத்தியில் ஒரு பெண் வந்து நின்றாள். "அதிகாரி அவர்களே, இந்த ஊரில் கொடிய போதையில் கலகம் செய்யும் பெண்மணி நான்! என்பது, உங்கள் அனைவருக்கும்

தெரியும். இப்பொழுது பாருங்கள், எனக்காக இந்த விக்கிள்ஸ்வொர்த் ஊழியர் ஜெபித்தார். என் இரத்தத்தோடு கலந்திருந்த குடிப்பழக்கத்தை நீக்கி, தேவன் என் ஆத்துமாவை இரட்சித்து விட்டார்! குடிப்பழக்க அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற்றேன்" என கூறியவுடன்....

"அங்கு வந்திருந்த போலீஸ் சீனியர் ஆபிஸர் ஒருவர் "இந்த தேவ ஊழியரின் ஊழியத்தை இடையூறு செய்ய என்னால் முடியாது. நீங்கள் வேண்டுமானால் இவரை கைது செய்யுங்கள்" எனக் கூறி, விலகி நின்றார். ஜனங்கள் மகிழ்வுடன் தேவனை துதித்தார்கள்!**

*மற்றொரு முறை, சில போலீஸ் அதிகாரிகள் நடு ஜாமத்தில் விக்கிள்ஸ்வொர்த்தின் வீட்டுக் கதவைத் தட்டி "உங்கள் உடைமைகளை எடுத்துக் கொண்டு இப்போதே இந்த வீட்டை காலி பண்ணுங்கள்" என ஆணை பிறப்பித்தார்கள். அதற்கு விக்கிள்ஸ்வொர்த் "உங்கள் ஆணையை மறுக்கிறேன்! ஆகிலும் உங்கள் ஆணையை ஒரு நிபந்தனையோடு ஏற்றுக் கொள்கிறேன். இங்கு வந்திருக்கிற போலீஸ் அதிகாரிகளாகிய நீங்கள், இந்த இடத்தில் முழங்கால்படியிடுங்கள்! நான் உங்களுக்காக ஜெபிப்பேன்! அவ்வாறு ஜெபித்தபிறகு, உங்கள் ஆணையின்படி வீட்டை காலிசெய்ய நான் தயார்!" என கூறியவுடன், தெய்வ பிரசன்னத்தில் நிற்க இயலாத அந்த போலீஸ் அதிகாரிகள், மௌனமாய் திரும்பிச் சென்று விட்டார்கள்!*

இவ்வாறாக தேவஊழியர் விக்கிள்ஸ்வொர்த், சுகமளிக்கும் வரம் பெற்றவராய் மாத்திரமல்ல, **விசுவாச தைரிய** நெஞ்சுடையவராய் கர்த்தருடைய நாமத்திற்குப் புகழ் சேர்த்தார்!

*- ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்*

---

## அவன், முன்பு போல் பயனற்றவனல்ல!

*கனவீனமானதை 'கனமுள்ளதாய்' மாற்றும் தேவன்*

முன்பு பயனற்றவனாய் வாழ்ந்து, இப்போது பயனுள்ளவனாய் மாறிய அற்புதத்திற்கு "**ஒநேசிமு**" ஓர் நல்ல சாட்சி! (பிலே.11). பவுல் செய்த சுவிசேஷ ஊழியத்திற்காக, ரோமானிய சிறையில் தள்ளப்பட்டார். ஓர் கைதியாக, நிந்தையான பாடுகள் பல அனுபவித்தார். இப்போது பவுல் இருந்த அதே சிறையில், ஒநேசிமு என பெயர் கொண்ட அடிமை தன் எஜமான் பிலேமோனுக்கு செய்த "ஏதோ அநீதிக்காக" சிறைப்பட்டான்! 'ஒநேசிமு' அந்த சிறையில் வாசமாயிருந்த காலங்களில், பவுல் மூலமாய் மனந்திரும்பி

கிறிஸ்துவுக்குள் மறுவாழ்வு பெற்றான்! அதைப் பவுல் கூறும்போது "சிறையில் மறுபிறப்பு பெற்ற அவன், எனக்கு அன்பானவன்" என பிலேமோனிடம் கூறி மகிழ்ந்தார்! (பிலேமோன் 9).

ஆண்டவரிடத்தில் "புதிய உறவுபெற்ற" ஒநேசிமுவை, நான் மனதார ஏற்றுக்கொண்டதைப்போல், முன்பு அவன் எஜமானாயிருந்த பிலேமோனே, நீயும் அவனை மனப்பூர்வமாய், ஏற்றுக்கொள்வாயாக! என அன்பின் கட்டளையாகக் கூறினார்! (பிலேமோன் 16,17).

*"**சி**றை வாழ்வு" ஒரு மனிதனை "ஜீவ வாழ்க்கைக்குள்" நடத்தி விட்டதே! சிறைப்பட்டோரிடம் அன்பு பாராட்டி, சந்தித்து, விடுதலையாக்கிய அந்த பாக்கியம் பவுலையே சாரும்! 'பயனற்றவன்' என பெயர் சூட்டப்பட்ட ஒநேசிமு, தேவனிடம் பெற்ற 'புதிய உறவினிமித்தம்' பயனுள்ள பாத்திரமாய் மாறிய விந்தையே, நம் எல்லோருக்கும் "இந்த ஆண்டு முழுதும்" நிலைத்திருப்பதாக! தான் சந்திக்க நேர்ந்த எவ்வித நிலைகொண்ட ஆத்துமாவிற்கும், ஒளியேற்றி மகிழ்ந்த பவுல் தாஸனைப்போல், பிறருக்கு ஒளியேற்றும் மக்களாய் நம் அனைவரையும் தேவன் மாற்றுவாராக!*

*ஒநேசிமு பெற்ற மாற்றத்தைப் போலவே சபைக்கும் நிகழ்ந்திட பவுல் விரும்பினார்! தேவனுடைய சபைக்கு வந்து சேர்ந்த 'கனவீன பாத்திரமாய்' கருதப்பட்ட ஒவ்வொருவரையும் கனமுள்ள பாத்திரமாய் மாற்றிடவே தேவன் விரும்புகிறார்! கிறிஸ்துவிலுள்ள "மாசில்லா ஜீவியத்தை" வாஞ்சித்து நாடும் 'அனைவரையும்' தேவன்* **தன் பெரிய வீடாகிய சபையில்** *வைத்து, சுத்திகரிக்கப்படச் செய்து, 'கனமுள்ள பாத்திரமாய்' மாற்றுவார் என்ற நற்செய்தி கிறிஸ்துவின் மெய்யான சபையிலுள்ள அனைவரையும் ஊக்குவிப்பதாக! (2தீமோ.2:20,21).*

இந்த புதிய ஆண்டிலும், எந்த நற்பணிக்கும் உதவ முடியாமல் முடங்கிப்போன ஒவ்வொருவரையும் "மதிப்புயர்ந்த கனமுள்ள பாத்திரமாய்" மாற்றிடவே தேவன் வாஞ்சிக்கிறார்! அது, நம் எஜமான் நிகழச் செய்திடும், அற்புத கிரியை! ஆம், இந்த ஒநேசிமு "**அவன் முன்புபோல் பயனற்றவனல்ல.....**" இப்போது, எவ்வித நற்பணிக்கும் உகந்த, கனமுள்ள பாத்திரம்! எஜமான் பயன்படுத்தும் பாத்திரம்! இவ்வித மகத்தான மறுரூபத்தை, தேவன் நம் சபைக்கும், சபையிலுள்ள யாவருக்கும் அருளுவாராக! (2தீமோத்தேயு 2:21) ஆமென்.

- T.ரத்தினகுமார்



'புராட்டஸ்டண்டு' சபைகளில் பரிசுத்தத்தை வலியுறுத்தியவர்!

# ரிச்சர்ட் பாக்ஸ்டர்

புராட்டஸ்டண்டு சபைகளில், பரிசுத்தத்தின் மறுமலர்ச்சியை கொண்டுவர அரும்பணி செய்தவர். "பாவத்தோடு சமரசம் இல்லை" என்ற அறைகூவலை இங்கிலாந்து புராட்டஸ்டண்டு சபைகளில் முழங்கியவர். வெறும் பாவமன்னிப்பு மாத்திரமல்லாமல் "பரிசுத்தமே" சபையின் ஆழமான அடித்தளம் என வல்லமையாய் பிரசங்கித்தார்! அதனிமித்தம் 'இங்கிலாந்து ராணியின்' கோபத்தை சம்பாதித்தார், சிறைவாசமும் அடைந்தார்! பின்பு அமெரிக்க தேசத்தில் "PURITAN CHURCH" "தூயோனின் சபை" என ஆரம்பித்து, பல்லாயிரம் மக்களை புராட்டஸ்டண்டு சபையின் தரத்தைவிட மேன்மையான பரிசுத்த தரத்திற்கு கொண்டு வந்தார்! அனேகம் பாமாலை பாடல்கள் எழுதினார்! சிறந்த ஆவிக்குரிய நூல்களையும் எழுதினார்!

'பரிசுத்தம்' என்பது, நம் பழக்கவழக்கங்கள் அனைத்தையும் மாற்றிவிடும்! பெரும் மகிழ்ச்சியான "கிறிஸ்துவைப் பற்றிய தியான வாழ்க்கை" பரிசுத்தத்தின் உயிர் நாடி! ஒருவன் தன் ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதையும் ஆண்டவருக்கு ஒப்புவிக்காமல் பரிசுத்த வாழ்க்கை வாழ இயலாது! என கிறிஸ்தவ அர்ப்பண ஜீவியத்தை தொய்வின்றி வாழ்ந்து, பிரசங்கித்தார்! அவர் எழுதிய "சீர்திருத்த பாஸ்டர்" என்ற புத்தகத்தில், ஒரு சபை ஊழியனின் மிகப்பெரிய உத்திரவாத ஜீவியத்தையும், அவன் பொறுப்புள்ள 'மந்தையின் மேய்ப்பன்' என்பதையும் ஆணித்தரமாய் வலியுறுத்தி எழுதினார்! அவர் என்ன தரத்தை முன்வைத்து எழுதினாரோ, அதன்படி வாழவும் செய்தார்!

ஒருவன் பரலோகத்தோடு உயிரோட்டமான தொடர்பு வைத்திராமல், பரலோகப் பிதாவிடம் சஞ்சரித்து எப்படி அவரோடு பேசிட முடியும்? 'நாவின் சுவை அரும்பு இல்லாமல்' ஒருவன் எப்படி அருசுவை உண்டு களித்திட முடியும்? என்றெல்லாம் பிரசங்கித்து, பரலோக ராஜ்ஜியத்தின் அன்பு, சமாதானம், சந்தோஷத்தை பருகி வாழ சவாலிட்டார்! தன் வாழ்வின் கடைசியில் "கணைய புற்றுநோய்" ஏற்பட்ட சமயத்தில்கூட "பரிசுத்தவான்களின் நித்திய இளைப்பாறுதல்" (The Saints Everlastiong Rest) என்ற மிக உற்சாகமாக புத்தகத்தை எழுதி முடித்தார்! அவர் முயற்சித்து 'புராட்டஸ்டண்ட்' சபையை 'பரிசுத்த எழுப்புதலுக்கு' கொண்டு வர எடுத்த பிரயாசங்கள் வெற்றி அடையவில்லை! ஆகிலும், அமெரிக்க தேசத்தில் அவர் உழைத்து ஊழியம் செய்து, பல்லாயிரம் மக்களை "புனிதம் நாடும் சபையாய்" (Puritan Church) உருவாக்கியது கர்த்தருடைய செயலே!

- நிரூபித்து வாழ்ந்த கிறிஸ்துவின் தாசர்கள்

## குப்பை செடியை "உலகத்தின் ஒளி" மணக்கச் செய்துவிடும்!

அசுத்தங்கள் நிறைந்த ஓர் இடத்தை நான் பார்த்தேன். கெட்டுப்போன பலதரப்பட்ட பொருட்கள் அங்கே கொட்டப்பட்டிருந்தன! அருவருப்பான கிருமிகள் அதன்மீது மேய்ந்து கொண்டிருந்தன! அங்கு துர்நாற்றம் வீசியது. ஆனால் நல்ல மணமுள்ள அழகுப் பூக்கள் அங்கு வளர்வதையும் கண்டேன். அந்த கொடிய துர்நாற்றத்தை அந்தப் பூக்களின் நறுமணம் மாற்றி விட்டதைக் கண்டு மிகுந்த ஆச்சரியம் அடைந்தேன்!

பொதுவாக, துர்நாற்றம் இந்நறுமண மலர்களின் வளர்ச்சிக்குத் தடை ஏற்படுத்தும் என்று தாவரவியல் நிபுணர்கள் கூறுவதுண்டு!

அவர்களின் கணிப்பிற்கு மாறாக, அம்மலர்ச் செடிகள் பூத்துக் குலுங்கி, நன்கு வளர்வதற்கு காரணம் என்னவாய் இருக்கக்கூடும்?

அவைகள் சூரியனுக்கு நேராயிருக்கும்போது, அதன் கதிரும், ஒளியும், செடியின் மேற்பட்டு, 'சூரியகாந்தம்' மலர்ச் செடிகளுக்கு கேடு செய்யும் பல கிருமிகளையும், புழுக்களையும் அழித்து, நறுமண மலர்ச் செடியின் வளர்ச்சிக்கு வழி உருவாக்கியதைக் காண்கிறேன்.

அதுபோலவே, பாவ அழுக்குப் படிந்த இவ்வுலகில் வாழும் ஒருவன், ஜெபத்தாலும், வேண்டுதலாலும் இருதயத்தைக் கடவுளுக்கு நேராக பரத்தை நோக்கித் திருப்பும்போது இறைவனிடமிருந்து வெளிச்சமும், ஆவிக்குரிய அனலும் பெற்று, கெட்ட உலகத்தின் துர்நாற்றத்தினின்று விடுதலை அடைந்து, 'உலகின் ஒளியாகிய' கிறிஸ்துவின் புதுவாழ்வு வாழ்வது சாத்தியமாகிறது!

ஓ வாலிபனே, உன் 'துர்நாற்றம்' நிறைந்த பாவ வாழ்க்கையை 'உலகத்தின் ஒளியாகிய' ஆண்டவர் இயேசு ஒருவரே, மன்னித்து, பாவத்தை ஒழித்து அழித்திட வலிமை கொண்டவர்! இந்த அன்புள்ள இரட்சக பெருமானை நோக்கி, உன் 'இளம் செடி' வளர்ந்துவிட்டால், உன் வாழ்வில் 'துர்நாற்றம் நீங்கி' நறுமணம் தோன்றுவது அதி நிச்சயம்! அது, நித்தியத்திற்கும் நிலைத்து நிற்கும் நறுமணம்!

- சுவிசேஷ மலர்

சந்தா அனுப்ப
QR பயன்படுத்தவும்

பரலோக பொக்கிஷங்கள்

Published and Owned by:
Madurai Christian Fellowship, Regd Society,
*Editor* T.Rathnakumar, Madurai.
Printed by SFA Print (P) Ltd., Sivakasi.

maduraichristianfellowship
@indianbk